விலை 10/=

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

04.08.2020 செவ்வாய்க்கிழமை

## சமூக ஊடகங்களில் சட்டவிரோத பரப்புரை

கொழும்பு, ஓக. 4
தேர்தல் பரப்புரைகள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடைந்த நிலையில் தேர்தல் சட்டங்களை மீறிய வகையில் சமூக ஊட

6

## ஓகஸ்ட் 20இல் முதல் அமர்வு

### சிறப்பு வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, ஓக. 4
நாளை நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் புதிய நாடாளுமன்றம் 2020ஆம் ஆண்டு ஓகஸ்ட் 20ஆம் திகதி கூட்டப்படவுள்ளது.

6



## சுதந்திரமான தேர்தல் நாளை நடக்கும்!!!



### தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தகவல்

கொழும்பு, ஓக. 4
பொதுத்தேர்தலை நீதியாகவும், சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. எனவே, அச்சமின்றிச் சென்று வாக்குரிமையை பயன்படுத்துமாறு தேர்தல் ஆணைக்குழுவின்

6

# ஏற்பாடுகள் பூர்த்தி

## வாக்குப்பெட்டிகள் இன்று எடுத்துச் செல்லப்பட்டன



யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 4
இலங்கையின் ஒன்பதாவது நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு நாளை புதன்கிழமை இடம்பெறவுள்ளது. வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப் பெட்டிகள் இன்று காலை 8 மணி முதல், பொலிஸ் பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்பட்டன. அவை பி.ப. 3 மணிக்கு முன்னர் வாக்களிப்பு நிலையங்களைப் பெரும்பாலும் சென்றடைந்துவிடும். சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றியவாறு வாக்களிப்புக்கான ஏற்பாடுகள் அனைத்தும் முழுமைப்படுத்தப்பட்டுள்ளன.

6

- வடக்கில் 858, 868பேர் வாக்களிக்கத் தகுதி
- 13 ஆசனங்களுக்கு 735 வேட்பாளர்கள் போட்டி
- 968 வாக்களிப்பு நிலையங்கள்
- 14,076 அதிகாரிகள் பணியில்
- 650 சுகாதார அதிகாரிகள் களத்தில்

## யாருக்கு வாக்களித்தீர்கள்? ஒருபோதும் கண்டறியமுடியாது!

### உதவித் தேர்தல்கள் ஆணையாளர் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 4
வாக்களிப்பின்போது யாருக்கு வாக்களித்தீர்கள் என்பதை ஒருபோதும் கண்டறிந்துகொள்ளவே முடியாது. வாக்காளர்கள் எந்த அச்சமும் இன்றி வாக்களிக்கலாம் என்று யாழ்ப்பாண மாவட்ட தேர்தல் ஆணைக்குழுவின் உதவி ஆணையாளரும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலருமான இ.கி.அமல்ராஜ் தெரிவித்தார். யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர், தொலைபேசியூடாகப் பொதுமக்களைத் தொடர்பு கொண்டு, தமக்கு வாக்களிக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

6

### விசித்திரமான தேர்தல்களம்

## 2 ஜனாதிபதிகள், 2 பிரதமர்களின் மகன்மார்கள் தேர்தலில் போட்டி!

### ஜனாதிபதி பதவி வகித்த இருவரும் களத்தில்

கொழும்பு, ஓக. 4
நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 208 பேர் போட்டியிடுகின்றனர். இவர்கள் ஒரு தடவையேனும் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்துள்ளனர். முன்னாள் ஜனாதிபதிகள் இருவர், முன்னாள் பிரதமர், முன்னாள் ஜனாதிபதிகளின் இரு புதல்வர்கள் ஆகியோரும் இதில் உள்ளடங்குகின்றனர்.
மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன ஆகியோர் முன்னாள் ஜனாதிபதிகளாவர் என்பதுடன், சஜித் பிரேமதாச, நாமல் ராஜபக்ஷ ஆகியோர் முன்னாள் ஜனாதிபதிகளின் புதல்வர்களாவர். ரணில் விக்கிரமசிங்க முன்னாள் பிரதமராவார். அத்துடன்,

6

## பேஸ்புக் விளம்பரங்களுக்கு வாரியிறைத்த வேட்பாளர்கள்

கொழும்பு, ஓக. 5
நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களும் அவர்களைச் சார்ந்த கட்சிகளும் ஆதரவாளர்களும் பெரும்தொகையான பணத்தை விளம்பரங்கள் உட்பட தேர்தல் செலவுகளுக்காக செலவிட்டுள்

6

### புதினம் தெரியுமோ?

மழை நின்றாலும் தூவானம் நிற்கவில்லை என்பதைப் போல தேர்தல் பரப்புரைகள் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவுடன் முடிவுக்கு வந்தாலும் சமூக ஊடகங்களில் பரப்புரைகள் இன்னமும் முடிவுக்கு வரவில்லை. மறுபுறம் போலிப் பத்திரிகை அடிப்பது, போலி மின்னஞ்சல்களிலிருந்து

6



# கிளிநொச்சியில் ஹெரோய்னுடன் ஒருவர் கைது

கிளிநொச்சி, ஓக.4

கிளிநொச்சி திருவையாறு சாந்தபுரம் பகுதியில் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் மதுஒழிப்புப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய இவர் கைதுசெய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து 10 கிராம் 8 மில்லிகிராம் ஹெரோய்ன், ஒரு மோட்டார் சைக்கிள் மற்றும் கைத்தொலைபேசி ஒன்றும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

சந்தேகநபர் கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என மது ஒழிப்புப் பிரிவு பொறுப்பதிகாரி டி. எம் சதுரங்க தெரிவித்தார். (ரி1-113)

## பொதுத்தேர்தலை முன்னிட்டு
# நாடளாவிய ரீதியில் 69 ஆயிரம் பேர் பாதுகாப்பு நடவடிக்கைகளில்!

கொழும்பு, ஓக. 4

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு நாடளாவிய ரீதியில் பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு தரப்பினர் உட்பட 69 ஆயிரம் பேர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர் என தேர்தல் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான பொலிஸ் அதிகாரியான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைதியான முறையில் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சட்ட ஒழுங்கைப் பாதுகாக்க அதிகாரத்தை முழுமையாகச் செயற்படுத்த ஒருபோதும் பின்வாங்கமாட்டோம். வாக்களிப்பு மத்திய நிலையங்கள், வாக்களிப்பு சூழல் மற்றும் வாக்கு எண்ணும் நடவடிக்கைகள் உட்பட வீதிப் போக்குவரத்து பாதுகாப்பு ஆகியவற்றுக்கு பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்பு தரப்பினர் சேவையில் ஈடுபடவுள்ளார்கள். மொத்தமாக 69,000 ஆயிரம் பேர் நாடு முழுவதும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள்.

தேர்தல் தொடர்பான பாதுகாப்பு மற்றும் சிவில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் இராணுவத்தினர் இணைத்துக்கொள்ளப்படவில்லை. பொலிஸ் நிலைய மற்றும் வீதி காவலரண் பாதுகாப்புகளுக்கு மாத்திரமே இராணுவத்தினர் இணைத்துக் கொள்ளப்படவுள்ளார்கள். தேர்தல் வன்முறை மற்றும் தேர்தல் சட்ட மீறல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளுக்கு கட்சி பேதமின்றி வேட்பாளர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு எதிரான உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். ஜனநாயக ரீதியில் தேர்தல் இடம்பெறுவதற்கு பொறுப்புடன் செயற்படுவோம். சட்ட ஒழுங்கைப் பாதுகாப்பதற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை முழுமையாகச் செயற்படுத்த ஒருபோதும் பின்வாங்கமாட்டோம் - என்றார். (ரி3)

# பொதுத்தேர்தலை முன்னிட்டு விசேட சேவையில் தபால் அலுவலகங்கள்

கொழும்பு, ஓக.4

பொதுத்தேர்தலை முன்னிட்டு நாடளாவிய ரீதியிலுள்ள தபால் அலுவலகங்களை இன்று மற்றும் நாளை மேலதிகமாக சில மணித்தியாலங்கள் திறப்பதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது. மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகர்களால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள, பிரதான மற்றும் உப தபால் அலுவலகங்கள் இன்றிரவு 8 மணி வரை திறக்கப்படும் என்று தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன குறிப்பிட்டுள்ளார். (ரி2)

# பார்வைக் குறைபாடுடையோர் வாக்களிக்க விசேட முறைமை

கொழும்பு, ஓக.4

பார்வைக் குறைபாடுடைய வாக்காளர்கள் வாக்களிப்பதற்காக, விசேட முறைமையொன்றை அறிமுகப்படுத்துமாறு கோரியுள்ள இலங்கை பார்வைக் குறைபாடானவர்களின் சங்கம், அவர்களின் இரகசியத்தைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறும் கோரியுள்ளது.

பார்வைக் குறைபாடுடைய வாக்காளர்கள் வாக்குகளை அளிப்பதற்காக, உதவியாளர் ஒருவர் நியமிக்கப்படுவார். எனினும், இங்கு இரகசியத் தன்மை குறித்தும், வாக்காளரால் குறிப்பிடப்படும் சின்னத்துக்கும், விருப்பிலக்கங்களுக்கும் மிகச் சரியாக வாக்களிக்கப்படுகிறதா என்பது தொடர்பில், உறுதிப்படுத்த முடியாதுள்ளது என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி2)

# தப்பிச் சென்றதாக கூறப்பட்ட பூனை தொடர்ந்தும் சிறை வளாகத்துக்குள்

கொழும்பு, ஓக. 4

வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து தப்பிச்சென்றதாகக் கூறப்பட்ட பூனை தொடர்ந்தும் சிறைச்சாலை வளாகத்துக்குள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிராம் ஹெரோய்ன், தொலைபேசிக்கான சிம் அட்டைகள் மற்றும் மெமரி காட் என்பன கட்டப்பட்ட நிலையில் இந்த பூனை கடந்த ஞாயிற்றுக்கிழமை வெலிக்கடை சிறைச்சாலைக்கு வெளியில் இருந்து பிடிக்கப்பட்டது.

பிடிக்கப்பட்ட பூனை சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டிருந்தது. எனினும் அது அங்கிருந்து தப்பிச் சென்று விட்டதாக நேற்று செய்திகள் வெளியாகி இருந்தன.

இந்நிலையிலேயே இந்தப் பூனை தொடர்ந்தும் சிறைச்சாலை வளாகத்துக்குள் சுதந்திரமாக சுற்றித் திரிகின்றது என சிறைச்சாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ரி3)

# விடுமுறை வழங்காத நிறுவனங்களுக்கு எதிராக துரித நடவடிக்கை

## தாமதிக்காது முறைப்பாடு வழங்குமாறு மஹிந்த தேசப்பிரிய கோரிக்கை

கொழும்பு, ஓக 4

வாக்களிக்கச் செல்வதற்கு விடுமுறை வழங்காத நிறுவன அதிகாரிகள் மற்றும் கடை உரிமையாளர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

புறக்கோட்டை பகுதியில் சிறு கடைகளில் தொழில்புரியும் ஊழியர்கள் நாளை இடம்பெறவுள்ள பொதுத்தேர்தலுக்கு வாக்களிக்கச்



செல்வதற்கு விடுமுறை வழங்கப்படவில்லை என்ற முறைப்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடு ஜனநாயகத்துக்கும் தேர்தல் சட்டத்திற்கும் முரணானது.

தனியார் நிறுவனங்களுக்கு வாக்களிப்பு தினத்தில் விடுமுறை வழங்குவது தொடர்பில் உள்ள சிக்கல் நிலையைக் கருத்திற்கொண்டு தூர அடிப்படையில் வாக்களிப்பதற்கு விடுமுறை வழங்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவ்விடயம் தொடர்பில் ஊடகங்கள் வாயிலாகவும் தெளிவுபடுத்தப்பட்டது.

இதுவரை விடுமுறை கிடைக்கப் பெறாத ஊழியர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவிலோ அல்லது தொழிற்துறை ஆணைக்குழுவிலோ விரைவாக முறைப்பாடு செய்யுங்கள். இவ்வாறான நிறுவன அதிகாரிகள் மற்றும் கடை உரிமையாளர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை விரைவாக எடுக்கப்படும் - என்றார். (ரி3)

# இலங்கையர்களை அழைத்துவருவது தற்காலிகமாக இடைநிறுத்தம்

கொழும்பு, ஓக.4

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவரும் நடவடிக்கைகள் மீண்டும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

நாளை நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை முன்னிட்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ரி2)

# மருந்துப் பொருள்களின் விலைகுறைப்புக்கு மருந்தாக்கல் நிறுவனங்கள் இணக்கம்

கொழும்பு, ஒக. 4

மருந்துப்பொருள்களின் சில வறை விலையை அதிகரித்து விற்பனைசெய்த குற்றச்சாட் டுக்காக இறக்குமதி அனுமதிப் பத்திரங்கள் ரத்துச் செய்யப்ப டும் கடிதம் அனுப்பப்பட்டுள்ள ஐந்து மருந்தாக்கல் நிறுவனங்க ளும் இம் மாதம் முதலாம் திகதி யில் இருந்து மருந்துப் பொருள் களின் விலையைக் குறைத்து விற்பனைசெய்ய முன்வந்துள்ளன.

இதன்படி கல்சிவிட்டா 50இன் விலை 800 ரூபாவில் இருந்து 661 ரூபா 30சதமாகவும், ரிவோட்ரில்(2 மில்லிகிராம்) 1801 ரூபாவில் இருந்து 1608 ரூபா 75 சதமாகவும் விற்பனை செய்யப்படவுள்ளன.

இந்த நிலையில் இந்த நிறுவனங்க ளுக்கு அனுப்பப்பட்டுள்ள அனுமதியை ரத்துச்செய்யும் கடிதங்கள் திரும்பப் பெறப்ப டாது. ஏற்கனவே முன்னெடுக் கப்பட்டுள்ள சட்ட நடவடிக் கைகள் தொடர்ந்தும் முன்னெ டுக்கப்படும். இந்த நிறுவனங்கள் கூறியுள்ளதைப் போன்று மருந் துப் பொருள்களின் விலையைக் குறைத்து விற்பனை செய்கின் றனவா என்பதைப் பரீட்சிக்க வேண்டியுள்ளது என தேசிய மருந்தாக்கல் ஒழுங்கமைப்பு அதிகாரசபையின் தலைவர் அசித்த டி சில்வா தெரிவித்துள் ளார். (ரி3)

# கொழும்பில் மற்றொரு புதிய துறைமுக நகரம்

கொழும்பு, ஒக.4

கொழும்பு துறைமுக நகரத்துக்கு அருகி லுள்ள கடற்பரப்பில் மண்மேட்டை உரு வாக்கி மற்றுமொரு புதிய துறைமுக நக ரத்தை நிர்மாணிக்க தீர்மானிக்கப்பட்டுள் ளது.

துறைமுக நகரத்தின் பணிகளை இவ்வருடத் தின் இறுதிக்குள் நிறைவுசெய்வதற்கு எதிர் பார்க்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆகவே, புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள துறைமுக நகரத்தின் பணிகளைத் துரிதப்ப டுத்துவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கை கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதனால், கொழும்பில் புதிதாக ஒரு நிலப்ப ரப்பு தோற்றம் பெறுவதோடு துறைமுக நகரம் மற்றும் புதிய துறைமுக நகர அபிவி ருத்தி ஊடாக அதிக தொழில் வாய்ப்புக்க ளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் வெள்ளவத்தை தொடக்கம் பத்தரமுல்லை வரையிலான படகு ஊடான போக்குவரத்து சேவையை நவீனமயப்படுத் தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ரி2)

## நாட்டின் சில இடங்களில் மழைக்கு சாத்தியம்

கொழும்பு, ஒக. 4

சப்ரகமுவ மற்றும் மத்திய மாகா ணங்களில் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. இதே வேளை வடமேல் மாகாணத்தில் பல தடவைகள் மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்க ளம் எதிர்வுகூறியுள்ளது.

மேலும், நாடு முழுவதும், குறிப் பாக வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காற்றின் வேகமானது அவ்வப் போது மணித்தியாலத்துக்கு 50-60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூ டிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புக ளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும். காற் றின் வேகமானது மணித்தியாலத் துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை காணப்படும். திருகோணமலையி லிருந்து காங்கேசன்துறை, மன் னார், கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப் புகள் அவ்வப்போது கொந்தளிப் பாகக் காணப்படும். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப் பாகக் காணப்படும். இது தொடர் பில் மக்களை அவதானத்துடன் செயற்படுமாறும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (ரி3)

# உலகில் மிகச் சிறந்த ஆணைக்குழு மனித உரிமை ஆணைக்குழுவே

### தீபிகா உடுகம சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக.4

மனித உரிமை ஆணைக்குழு உலகில் மிகவும் சிறந்த ஆணைக்குழுக்களில் ஒன்றாக தரப்படுத்தப்பட்டிருக்கிறது எனவும், இது தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழு வுக்குப் பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றேன் எனவும் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தலைவர் தீபிகா உடு கம, அரசமைப்புப் பேரவைக் குச் சுட்டிக் காட்டியிருந்தார்.

அரசமைப்பு பேரவையின் 82 ஆவது கூட்டத் தொடரா னது அதன் தலை வர் கரு ஜயசூரிய தலைமையில் நேற்று மாலை சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது. இதன்போதே அவர் இதனைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதன்போது, பொதுச்சேவை கள் ஆணைக்குழு, மனித உரிமை ஆணைக்குழு மற்றும் இழப்பீடு தொடர்பான அலு வலகம் ஆகியவற்றில் காணப் படும் வெற்றிடங்களை நிரப்புவது குறித்து அர சமைப்பு பேரவை கவனம் செலுத்தியதுடன், இவற்றை நிரப்புவது குறித்த இறுதித்தீர்



மானத்தை அடுத்த கூட்டத்தில் எடுப்பதற்கும் முடிவுசெய்யப்பட்டது.

அத்துடன், நிதி ஆணைக் குழு, எல்லை நிர்ணய ஆணைக்குழு, கணக்காய்வு சேவை ஆணைக்குழு மற்றும் தேசிய கொள்வனவு ஆணைக் குழு ஆகியவற்றிடமிருந்து கிடைக்கப் பெற்ற காலாண்டு அறிக்கைகள் பற்றியும் அரசமைப்பு பேரவை கவனம் செலுத்தியது.

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தலைவர் பதவியிலி ருந்து விலகுவதாக தீபிகா உடுகம வழங்கியுள்ள இரா ஜினாமாக் கடிதம் குறித்து அவதானம் செலுத்தியிருந்த அரசமைப்பு பேரவை, மனித உரிமைகள் ஆணைக்குழுவை உயர்ந்த இடத்துக்குக் கொண்டுசெல்ல அவர் வழங்கிய தலைமைத்துவத்தை யும் பாராட்டியிருந்தது. (ரி2)

# ஐம்பொன் முருகன் சிலையை கடத்தி விற்க முற்பட்டவர் கைது

மட்டக்களப்பு, ஒக.4

திருகோணமலையிலிருந்து மட்டக்களப் புக்கு சட்டவிரோதமாக முருகன் சிலை ஒன்றைக் கடத்தி விற்பனை செய்ய முயற் சித்த பதவியில் இருந்து இடைநிறுத்தப் பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது என்று மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவல் ஒன்றுக்கமைய சம்பவதினமான நேற்று திங்கட்கிழமை இரவு திருகோண மலையில் இருந்து மட்டக்களப்புக்கு சட்டவிரோதமாக ஐம்பொன்னிலான முருகன் சிலையைக் கடத்தி வந்து விற்க முயன்றபோது சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட வர் பொலிஸ் உத்தியோகத்தில் இருந்து இடைநிறுத்தப்பட்ட திருகோணமலை முள்ளிப்பொத்தானையைச் சேர்ந்த 54 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது. கைப்பற்றப்பட்ட சிலை புதையலில் இருந்து கிடைத்தது எனவும் அதனை ஒரு நண்பர் தந்தார் எனவும் சிலையை விற்பதற் காக மட்டக்களப்புக்கு வந்தார் எனவும் கைதுசெய்யப்பட்ட நபர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். அவரை நீதிமன்றில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி1)



# கைக்குண்டு மீட்பு

கம்பஹா, ஒக.4

கம்பஹா ஒருதொட்ட பகுதியில் தனியார் காணி ஒன்றில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட கைக்குண்டு பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் செயலி ழக்கச் செய்யப்பட்டுள்ளது. இதேவேளை கிரிபத்கொடை பெரோரா மாவத்தை யில் அமைந்துள்ள வீடொன்றின் முற்றத்தில் காணப்பட்ட குப்பையில் பயிற்சிக்கு பயன்படுத்தப்படும் மோட் டார் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)




# வாகன விபத்தில் இருவர் உயிரிழப்பு

மாத்தறை, ஒக.4

மாத்தறை பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில், பெண்கள் இருவர் உயிரிழந்துள்ளனர். மாத்தறை யில், அப்பரெக்க பகுதியில், ஆடைத்தொழிற்சாலைக்கு சொந்தமான பஸ் ஒன்றுடன் கார் மோதியதா லேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி1)

# வாக்குப்பெட்டிகள் விநியோகம்

## யாழ்ப்பாணம்







யாழ்ப்பாண மாவட்டத்துக்கான வாக்குப்பெட்டிகள் யாழ். மத்திய கல்லூரியில் இருந்து வாக்குச் சாவடிகளுக்கு இன்று காலை எடுத்துச்செல்லப்பட்டன. நெடுந்தீவுக்கான வாக்குப் பெட்டி கள் கடற்படையின் உதவியுடன் ஹெலிகொப்டர் மூலம் எடுத்துச் செல்லப்பட்டன. (ஐ-106-111)

## கிளிநொச்சி











கிளிநொச்சி மாவட்டத்துக்கான வாக்குப் பெட்டிகள் இன்று காலை கிளி நொச்சி பழைய கச்சேரியிலிருந்து வாக்குச் சாவடிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. (ஐ-6-214)

## வவுனியா



வவுனியா மாவட்டத்துக்கான வாக்குப் பெட்டிகள் வவுனியா மாவட்டச் செய லகத்தில் இருந்து வாக்குச்சாவடிகளுக்கு இன்று காலைஎடுத்துச்செல்லப்பட்டன. (ஐ-110)





## முல்லைத்தீவு






முல்லைத்தீவு மாவட்டத்துக்கான வாக்குப் பெட்டிகள் முள்ளிய வளை வித்தியானந்தா கல்லூரியில் இருந்து வாக்குச் சாவடிகளுக்கு இன்று காலை எடுத்துச் செல்லப்பட்டன. (ஐ)

## மன்னார்







மன்னார் மாவட்டத்துக்கான வாக்குப்பெட்டிகள் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய கல்லூரியிலிருந்து வாக்குச் சாவடிகளுக்கு இன்று காலை எடுத்துச் செல்லப்பட்டன. (ஐ-60,213)

# வாக்களிப்பு ஏற்பாடுகள் அனைத்தும் நிறைவு

## வவுனியா மாவட்டச் செயலர் தெரிவிப்பு

வவுனியா, ஓக.4

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் நிறைவுபெற்றுள்ளன என வவுனியா மாவட்டச் செயலரும்,தெரிவத்தாட்சி அலுவலருமான சமன் பந்துலசேன தெரிவித்தார். மாவட்டச் செயலகத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள 141 வாக்களிப்பு நிலையங்களில் 100 இற்கும் மேற்பட்ட நிலையங்களுக்கான வாக்குப்பெட்டிகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் (முற்பகல்10 மணி வரை) அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.இதற்காக அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை ஈரப்பெரியகுளம் பரகும் மகாவித்தியாலத்தில் அமைக்கப்பட்டிருந்த வாக்களிப்பு நிலையத்தில் குளவிக்கூடு காணப்படுகின்றமையால் பாதுகாப்புகருதி, அந்தவாக்களிப்பு நிலையம் இரட்டை கலாசார மண்டபத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. இது தொடர்பில் வாக்காளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஏனைய வாக்களிப்பு நிலையங்களில் குளவிக்கூடுகள் இருக்கின்றனவா என்பது தொடர்பாக அதிகாரிகளால் ஆராயப்பட்டு வருகிறது. அத்துடன் வன்னியின் முதலாவது தேர்தல் முடிவை நாளைமறுதினம் மதியம் 12 மணி அளவில் வெளியிடுவதற்கு எதிர்பார்க்கப்பட் டுள்ளது. என்றார். (ஐ-110)

## சமூக ஊடகங்களில்...

கங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட பரப்புரை நடவடிக்கைகள் தொடர்பாக 940 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.
ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி மேலும் தெரிவித்ததாவது:
கடந்த இரண்டு மாதங்களில், சமூக வலைத் தளங்களில் தேர்தல் சட்டங்களை மீறிய 3 ஆயிரத்து 444 சம்பவங்கள் தொடர்பாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.
சுகாதார சட்டங்களை மீறி தேர்தல் பரப்புரைகளில் ஈடுபட்டமை தொடர்பாக 2 ஆயிரத்து 483 முறைப்பாடுகளும் வெறுக்கத்தக்க பேச்சு தொடர்பாக 30 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றன.
75 துன்புறுத்தல் சம்பவங்கள் மற்றும் 45 பெண் வேட்பாளர்கள் தவறாக சித்திரிக்கப்பட்டமை தொடர்பிலும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ,5)



## ஓகஸ்ட் 20இல்...

அரசமைப்பின் மூலமும் நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தின் மூலமும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் இந்த தீர்மானம் பெறப்பட்டுள்ளது. இது பற்றி அறிவிக்கும் விசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்று நள்ளிரவு வெளியிடப்பட்டுள்ளது. (ஒ,5)

## பேஸ்புக் விளம்பரங்களுக்கு...

ளனர். இதில் பேஸ்புக் விளம்பரங்களுக்காக உத்தியோகபூர்வமாக செலவிட்ட மொத்தத் தொகை பற்றிய விவரங்கள் வெளியாகியுள்ளன.
கடந்த மே மாதம் முதல் தேர்தல் பரப்புரைகள் நிறைவுக்கு வந்த இறுதித்தினமான ஓகஸ்ட் 2ஆம் திகதிவரை 28 ஆயிரத்து 510 விளம்பரங்களுக்காக 4 லட்சத்து 78 ஆயிரத்து 545 அமெரிக்க டொலர்களை அதாவது 8 கோடியே 87 லட்சத்து 83 ஆயிரத்து 939 ரூபா 47 சதத்தைச் செலவிட்டுள்ளனர்.
இவர்களில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ 111 பேஸ்புக் விளம்பரங்களுக்காக 20 ஆயிரத்து 81 அமெரிக்க டொலர்களை அதாவது 37 லட்சத்து 25 ஆயிரத்து 574 ரூபாவை செலவிட்டுள்ளார். அவருக்கு அடுத்த நிலையில் அங்கஜன் இராமநாதன் செலவிட்டுள்ளார். அவர் 26 லட்சத்து 88 ஆயிரத்து 204 ரூபாவை இதற்காகச் செலவிட்டுள்ளார். (ஒ,5)

# ஏற்பாடுகள்...



வடக்கில் யாழ்ப்பாணம் மற்றும் வன்னித் தேர்தல் மாவட்டங்களில் உள்ளடங்கும் 968 வாக்களிப்பு நிலையங்களுக்கும் இன்று காலை வாக்கெண்ணும் நிலையங்களிலிருந்து வாக்குப் பெட்டிகள் அனுப்பி வைக்கப்பட்டன.
யாழ்ப்பாண மாவட்டத்தில் 508 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 7 ஆயிரத்து 795 அலுவலர்கள் கடமையில் ஈடுபட்டுள்ளனர். வாக்களிப்பு நிலையங்களுக்கான பெட்டிகள் 125 பஸ்களில் இன்று காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலிருந்து அனுப்பி வைக்கும் பணிகள் ஆரம்பமாகின. மதியம் 12.30 மணியளவில் அந்தப் பணிகள் நிறைவுக்கு வந்தன. நெடுந்தீவுக்கான வாக்குப் பெட்டிகள் குறிகாட்டுவான் துறைமுகத்தில் வைத்து கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டன. நாளைய தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 4 லட்சத்து 79 ஆயிரத்து 584 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.
கிளிநொச்சி மாவட்டத்தில் 107 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆயிரத்து 745 அலுவலர்கள் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர். வாக்களிப்பு நிலையங்களுக்கான பெட்டிகள் 48 பஸ்களில் பழைய மாவட்டச் செயலகத்தலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் 92 ஆயிரத்து 260 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.
யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியை உள்ளடக்கிய யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 7 ஆசனங்களுக்காக 330 பேர் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.
வன்னித் தேர்தல் மாவட்டத்தின் வவுனியா மாவட்டத்தில் 141 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆயிரத்து 550 அலுவலர்கள் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர். வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப் பெட்டிகள் 37 பஸ்களில் அனுப்பி வைக்கப்பட்டன. வவுனியா மாவட்டத்தில் ஒரு லட்சத்து 19 ஆயிரத்து 811 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் 136 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆயிரத்து 834 அலுவலர்கள் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர். வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப் பெட்டிகள் 48 பஸ்களில் இன்று காலை அனுப்பி வைக்கப்பட்டன. முல்லைத்தீவு மாவட்டத்தில் 78 ஆயிரத்து 371 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.
மன்னார் மாவட்டத்தில் 76 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆயிரத்து 202 அலுவலர்கள் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர். வாக்களிப்பு நிலையங்களுக்கான வாக்குப் பெட்டிகள் 30 பஸ்களில் அனுப்பி வைக்கப்பட்டன. மன்னார் மாவட்டத்தில் 88 ஆயிரத்து 842 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.
வன்னித் தேர்தல் தொகுதியில் 6 பேரைத் தெரிவு செய்வதற்காக 405 பேர் போட்டியிடுகின்றனர்.
இதேவேளை இந்தத் தேர்தலில் கொரோனா அச்சம் காரணமாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதற்காக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்துக்கு உட்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்பநல மருத்துவ மாதுக்கள் என்று 650 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ஒ,5,6,110)

## 2 ஜனாதிபதிகள்...

முன்னாள் பிரதமர்களான திமு ஜயரத்ன, ரத்னசிறி விக்கிரமநாயக்க ஆகியோரின் புதல்வர்களும் போட்டியிடுகின்றனர். (ஒ,5,44)

## யாருக்கு...

தேர்தலில் நீங்கள் யாருக்கு வாக்களித்தீர்கள் என்பதைக் கண்டறிவோம் என்றும் கூறியுள்ளார். இந்த நிலையில், இவ்வாறான கூற்று தவறானது எனவும், தேர்தலை நடத்துவது தேர்தல்கள் ஆணைக்குழுதான் எனவும் அரசியல்வாதிகள் அல்லர் என்றும் தெரிவித்த அமல்ராஜ், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் யாருக்கு வாக்களித்தீர்கள் என்பதை எந்தவொரு அதிகாரிகளோ அல்லது எந்தவொரு தரப்பினராலோ கண்டறிய முடியாது என்று குறிப்பிட்டார்.
மக்கள் பயம் இன்றி வாக்களிக்க முடியும். அனைவரும் வாக்களிக்க வேண்டும். முடிந்தவரை நேரத்தோடு வாக்களிக்க வேண்டும். சுகாதார நடைமுறைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அச்சப்படத் தேவையில்லை. இவற்றையும் தாண்டி வாக்காளர்களுக்கு அழுத்தம் பிரயோகித்தால் முறையிடலாம். முறைப்பாடுகள் தொடர்பிலும் இரகசியம் காக்கப்படும்,- என்றார். (ஒ,5)

# சுதந்திரமான தேர்தல்...

தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.
கம்பஹா மாவட்டத்தில் தேர்தலுக்காக முன்னெடுக்கப்படும் பணிகளை இன்று காலை கண்காணிப்பதற்கு சென்றிருந்த தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர், அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
தேர்தல் பரப்புரைகளின்போது இம்முறை வன்முறைச்சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை. தேர்தல் விதிமுறைகளைமீறும் வகையிலான சில சம்பவங்கள் பதிவாகியிருந்தன. கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் இது மிகவும் குறைவாகும்.
தேர்தல் பாதுகாப்புப் பணிகளில் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்று கருதப்படும் பகுதிகளுக்கு பதில் பொலிஸ்மா அதிபரின் ஆலோசனையின் பேரில் விசேட அதிரடிப்படை பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது. கலகம் அடக்கும் பொலிஸாரும் தயார் நிலையிலேயே இருக்கின்றனர்.
இவ்வாறு தேர்தலை நீதியாகவும், சுதந்திரமாகவும், சுகாதாரப் பாதுகாப்பு ஏற்பாடுகளுடனும் நடத்துவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. எனவே, வாக்காளர்கள் அச்சமின்றி வாக்களிப்பு நிலையங்களுக்குச்சென்று வாக்களிக்கலாம்.
தேர்தல் முடிவுகளை 6 ஆம் திகதி நள்ளிரவுக்குள்ளும், விருப்பு வாக்கு விவரங்களை 7 ஆம் திகதி நள்ளிரவுக்குள்ளும் வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றோம். தேசியப்பட்டியல் விவரம் கிடைத்துவிட்டால் ஓகஸ்ட் 10 ஆம் திகதியளவில் எல்லா விவரங்களும் வர்த்தமானி அறிவித்தலில் வெளிவந்துவிடும். அதாவது தேர்தல் மற்றும் அதன் பின்னர் இடம்பெறவேண்டிய அனைத்து பணிகளையும் 10 ஆம் திகதியளவில் நிறைவு செய்வதற்கு திட்டமிட்டுள்ளோம், என்றார். (ஒ,5,44)

## புதினம் தெரியுமோ

தகவல்களை அனுப்புவது என்பதும் தொடர்கின்றது.
இந்தத் தேர்தலில் தென்னிலங்கை சிங்களக் கட்சி ஒன்று போலிப் பத்திரிகைகளை நாளைய தினம் அடித்து வெளியிடவுள்ளதாக முன்னரே தகவல்கள் கசிந்துள்ளன. மக்கள் விழிப்பாக இருப்பார்கள் என்பதால், வேறு ஏதாவது திருகுதாளத்தைச் செய்வதற்கு அந்தக் கட்சியின் இங்குள்ள பிரகிருதி செய்யக் கூடும்.
கடந்த இரண்டு நாள்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் ஒருவரின் படத்துடன் அவரது ஊடகப் பிரிவு என்று தெரிவித்து ஊடகங்களுக்கு மின்னஞ்சலில் செய்திகள் அனுப்பப்பட்டன. அவர் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் பேசிய பேச்சு அதில் உள்ளடக்கப்பட்டிருந்தது.
நேற்றைய தினமும் இன்றைய தினமும் அதே மின்னஞ்சலிலிருந்து, அந்த வேட்பாளர் தனக்கு மாத்திரமே வாக்களிக்கக் கோருவது போன்று குறிப்பிட்டு ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்த வேட்பாளரின் புகழ்பாடி மேற்படி மின்னஞ்சல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட வேட்பாளரால் இது மேற்கொள்ளப்படவில்லை. ஆனாலும் அவரது ஆதரவாளர்களாலோ அல்லது குழப்பம் விளைவிக்க திட்டமிடும் தென்னிலங்கைக் கட்சியின் இங்குள்ள பிரகிருதியின் ஆள்களாலோ இது மேற்கொள்ளப்பட்டிருக்கலாம்.
தேர்தலுக்கு இன்னும் ஒரு நாளே இருக்கின்றது. இன்னும் என்னென்ன கூத்துக்கள் எல்லாம் அரங்கேற இருக்கின்றனவோ தெரியவில்லை.

பட்சி



# நாசா வெளியிட்டுள்ள இலங்கை ஒளிரும் காட்சி

வொஷிங்டன், ஒக.4

சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படமொன்றில் இலங்கையும், இந்தியாவின் தெற்கு முனையும் பிரகாசமாக ஒளிரும் அழகான காட்சியொன்றை நாசா வெளியிட்டுள்ளது.

நாசா விண்வெளி வீரர்களான பொப் பெஹன்கென் மற்றும் டக் ஹர்லி ஆகியோர் சர்வதேச விண்வெளி நிலையத்தில் இரண்டு மாதங்கள் கழித்த பின்னர் கடந்த 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பூமியை வந்தடைந்தனர். முதன்முதலில் மனிதர்களால் இயக்கப்பட்ட விண்வெளி ஆய்வுத் தொழில்நுட்பங்கள் நிறுவனத்தின் பயணத்தின் போது பெஹன்கென் மற்றும் டக் ஹர்லி ஆகியோரால் எடுக்கப்பட்ட சிறந்த புகைப்படங்களை நாசா வெளியிட்டுள்ளது. அதில் ஜூலை 24 அன்று சர்வ தேச விண்வெளி நிலையத்திலிருந்து எடுக்கப்பட்ட புகைப் படமொன்றில் இலங்கையும், இந்தியாவின் தெற்கு முனையும் பிரகாசமாக ஒளிர்கின்றமை பதிவாகியுள்ளது. (ரி1)

# ஆப்கன் சிறைச்சாலையில் ஐ.எஸ்.ஐ.எஸ் தாக்குதல்

## பாதுகாவலர் 24 பேர் உயிரிழப்பு

காபூல், ஒக.4



ஆப்கானிஸ்தானின் கிழக்கு நகரான ஜலலாபாத்திலுள்ள சிறைச்சாலை யொன்றின் மீது நேற்றிரவு ஐ.எஸ்.ஐ.எஸ் ஆயுதக்குழுவின் ஆயுததாரிகள் மேற் கொண்ட தாக்குதலில் 24 பேர் கொல்லப் பட்டுள்ளனர். இத் தாக்குதல் பெரும் சிறையுடைப்புக்கும் வழிவகுத்துள்ளது. அதைத்தொடர்ந்து ஐ.எஸ்.ஐ.எஸ் ஆயுத தாரிகளுக்கும், ஆப்கானிஸ்தான் பாதுகாப் புப் படைகளுக்குமிடையே துப்பாக்கி மோதலும் வெடித்துள்ளது. சிறைச்சாலை யின் நுழைவாயிலில் கார்க் குண்டு வெடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே தாக்கு தல் ஆரம்பமாகியுள்ளது. பாதுகாவலர்க ளின் மீது ஐ.எஸ்.ஐ.எஸ் ஆயுததாரிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட தைத் தொடர்ந்து பல்வேறு குண்டு வெடிப் புகள் இடம்பெற்றுள்ளன. 2,000 வரையான சிறைக்கைதிகள் உள்ள இந்த சிறைச்சாலை யின் மீதான தாக்குதலில் சுமார் 30 ஆயுத தாரிகள் பங்கெடுத்துள்ளனர் என்று நன்கர்ஹர் மாகாணத் தலைநகரிலுள்ள நாடாளுமன்ற உறுப்பின ரான சொஹ்ரப் குவாடெரி தெரிவித்துள்ளார். (ரி1)

# பாரதிராஜா தலைமையில் புதிய தயாரிப்பாளர் சங்கம்



இயக்குநர் பாரதிராஜா தலைமையில் புதிய தயாரிப்பாளர்கள் சங்கம் உதயமாகியுள்ளது.

நடிகர் விஷால் தலைமையில் செயற்பட்டு வந்த தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கத்தின் தேர்தல் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. அதைய டுத்து தயாரிப்பாளர் சங்கத்தின் செயற்பாடு கள் முடங்கி உள்ளன.

இந்த நிலையில், இயக்குநர் பாரதிராஜா தலைமையில் புதிய தயாரிப்பாளர் சங்கம் உதயமாகி உள்ளது.

இதுகுறித்து பாரதிராஜா கூறுகையில், “தாய் சங்கத்தை உடைக்கவோ, பிரித்தெடுக்கவோ இல்லை. கொரோனாவால் நுரையீரல் பாதிக்கப்பட்ட சினிமாவை திரையுலகினரே மருந்து கொடுத்து சரியாக்க வேண்டிய நேரம் இது. உறுப்பினர் சேர்க்கை இன்றிலிருந்து தொடங்க உள்ளது. புதிய நிர்வாகிகள் குறித்து விரைவில் அறிவிப்பு வெளியிடப்ப டும்.

மேலும் புதிய சங்கத்தின் பிறப்பு அவசிய மாகிறது” என்றும் தயாரிப்பாளர்களுக்கு பாரதிராஜா விளக்கமளித்துள்ளார்.



# ‘சகுந்தலா தேவி’

விமர்சனம்



மனித கம்ப்யூட்டர்’ என்று அழைக்கப்பட்ட கணித மேதை சகுந்தலாதேவியின் வாழ்வை அடிப்படை யாக வைத்து உருவாக்கப்பட்ட படம் ‘சகுந்தலா தேவி’.

அமேசான் பிரைமில் வெளியாகியிருக்கும் இந்தப் படம், மகள் அனுபமாவின் பார்வையில் சகுந்தலா தேவியின் வாழ்வைச் சொல்கிறது.

சகுந்தலாதேவியின் மகள் அனுபமா, தன் தாய் மீது லண்டனில் வழக்குத் தொடர்வதில் துவங்குகிறது கதை. பிறகு நிகழ்காலமும் கடந்த காலமுமாக அந்த மேதையின் வாழ்க்கை விரிகிறது. ஒரு எளிய குடும்பத்தில் பிறக்கும் சகுந்தலா தேவியின் மேதமையை சிறுவயதிலேயே கண்டுகொள்ளும் தந்தை, அவரை வைத்து கண்காட்சிகளை நடத்தி பணம் சம்பாதிக்கி றார். வழக்கமான குழந்தைப் பருவத்தை இதனால் இழக்கும் சகுந்தலாதேவி, தன் மீது அக்கறையில்லாத குடும்பத்தை வெறுக்க ஆரம்பிக்கிறார். குறிப்பாக தன் தாயை மிகவும் வெறுக்கிறார்.

வளர்ந்த பிறகு, தான் நினைத்ததையெல்லாம் அடைய நினைக்கிறார். திருமணமாகி குழந்தை பெற்ற பிறகு, தன் குழந்தை மீது அதீதமான அன்பை வெளிக்காட்டுவதாக நினைத்து தான் செல்லும் இடங்களுக்கும் நாடுகளுக்கும் குழந்தையைத் தன்னு டனேயே அழைத்துச் செல்ல, அந்தக் குழந்தை தன் வழக்கமான குழந்தைப் பருவத்தை இழந்ததாகக் கருதுகிறாள். இப்படி இரண்டு தலைமுறைகளைச் சேர்ந்த, இரண்டு பெண்கள் தங்கள் வழக்கமான குழந்தைப் பருவத்தை இழந்து, அதற்குக் காரணமான தத்தம் தாய்மார்களை வெறுக்கிறார்கள். இறுதியில் அவர்களைப் புரிந்துகொள்கிறார்கள்.

ஒரு கணித மேதையின் கதை எனும்போது, அதனை சுவாரஸ்யமான திரைக்கதையாகச் சொல்வது சவாலான காரியம்தான். சகுந்தலாதேவி கணிதப் புதிர்களை விடுவிப்பதை எந்த அளவுக்கு திரையில் சுவாரஸ்ய மாகச் சொல்லிவிட முடியும்? ஆனால், இந்தப் படத்தில் அதனை முடிந்தவரை முயன்று, பெரும ளவு வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். சகுந்தலா தேவி புதிர்களை விடுவிக்கும் காட்சிகளை வடிவ மைத்திருக்கும் விதம், இதேபோல் கணிதப் புதிர்களை விடுவிக்கும் காட்சிகள் இன்னும் அதிகமாக இருக்கக்கூடாதா என்று நினைக்கவைக்கிறது.

ஆனால், படத்தின் மையம் என்பது சகுந்தலா தேவி எவ்வாறு கணிதப் புதிர்களை விடுவித்தார், எப்படி எண்களைப் புரிந்துகொண்டார் என்று சொல்வது அல்ல. மாறாக, சகுந்தலா தேவியின் அறியப்படாத மற்றொரு பக்கத்தைச் சொல்வதுதான். படம் பார்ப்பவர்கள் ஒரு கட்டத்தில் சகுந்தலா தேவியை வெறுக்கக்கூடும். சகுந்தலா தேவியின் சாதனையை பின்னுக்குத் தள்ளி, அவரது சொந்த வாழ்வை இம்மாதிரி முன்வைப்பதற்கான காரணம் என்ன என்ற கேள்விகளும் எழுகின்றன. ஆனால், படம் முடியும்போது ஒரு நிறைவை அளிக்கிறது.

சகுந்தலாதேவியாக வரும் வித்யாபாலனுக்கு அவரது சிறந்த படங்களில் இதுவும் ஒன்றாக இருக்கும். ஒரு கட்டத்தில் வித்யா பாலன் என்பதே மறந்துபோய் சகுந்தலாதேவிதான் கண்முன்னே நிற்கிறார். அவரது மகளாக வரும் சான்யா மல்ஹோத்ராவும் சிறப்பான நடிப்பை அளித்திருக்கி றார்.

# வயது முறைகேடு: பொது மன்னிப்பு வழங்க பி.சி.சி.ஐ முடிவு

புதுடில்லி, ஒக.4

வயது குறித்த முறைகேட்டில் ஈடுபட்டுள்ள கிரிக்கெட் வீரர்கள் தாங்களாகவே முன் வந்து குற்றத்தை ஒப்புக்கொண்டால் பொது மன்னிப்பு வழங்கப்படும் என்று பி.சி.சி.ஐ தெரிவித்துள்ளது.

இந்தியாவிலுள்ள தேசிய, மாநில அளவிலான கிரிக்கெட் அணியில் 18 வயதுக்கு உட்பட்டோர், 23 வயதுக்கு உட்பட்டோர், சீனியர் அணி எனப் பல பிரிவுகள் உள்ளன. இந்த அணிகளில் சில வீரர்கள் வயதைக் குறைத்துக் காட்டி அணியில் முறைகேடாக இடம் பிடித்து விளையாடுகிறார்கள்.

இவ்வாறு விளையாடும் வீரர்க ளின் முறைகேடு கண்டுபிடிக்கப்படும் போது அவர்களின் கிரிக்கெட் வாழ்க்கையும், அவருக்குப் பதிலாக இடம்பிடிக்க வேண்டிய வீரர்களின் கிரிக்கெட் வாழ்க்கையும் வீணாகி விடுகிறது.

இந்த நிலையில், வயது முறைகேட்டில் ஈடுபட்ட வீரர்கள் தாங்களாக முன்வந்து செப்ரெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் குற்றத்தை ஒப்புக்கொண்டால் அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படும். இல்லையெனில் இரண்டு ஆண்டுகள் தடைவிதிக்கப்படும். அதன்பின்னர் மாநில மற்றும் தேசிய மட்டங்களிலுள்ள அணிகளில் விளையாட முடியாது என்றும் தெரிவித்துள்ளது. (ரி2)




# ஐ.பி.எல். தொடர்: அதிகாரபூர்வ அறிவிப்பு

புதுடில்லி, ஒக.4

ஐ.பி.எல் தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு ஓகஸ்ட் 2 ஆம் திகதி ஐ.பி.எல் ஆட்சி மன்றக் குழுவால் அறிவிக்கப்படும் என்று ஏற்கனவே தெரிவிக்கப்பட்ட நிலையில், நேற்றுமுன்தினம் ஐ.பி.எல் ஆட்சி மன்றக் குழு கூடியது. அக் கூட்டத்தின் பின்னர், ஐக்கிய அரபு அமீரகத்தில் ஐ.பி.எல். தொடர் செப்ரெம்பர் 19 ஆம் திகதி முதல் நவம்பர் 10 ஆம் திகதி வரை நடைபெறும் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பெண்களுக்கான ஐ.பி.எல் லீக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி2)



# இருமினால் தடை!

## கால்பந்து சங்கம் எச்சரிக்கை

லண்டன், ஒக.4


கால்பந்து போட்டியின் போது வீரர் ஒருவர் எதிரணி வீரர்களின் முகம் அருகில் அல்லது நடுவர் முகம் அருகில் வேண்டுமென்றே இருமினால் வீரர்களுக்கு தடைவிதிக்கப்படும் என்று இங்கிலாந்து கால்பந்து சங்கம் அறிவித்துள்ளது.

அதுமட்டுமன்றி, ஒரு வீரரிடம் இருந்து மற்றொரு வீரருக்கு கொரோனாத் தொற்று பரவாமல் இருக்க பல்வேறு வழிகாட்டு நெறிமுறைகளையும் இச் சங்கம் வழங்கியுள்ளது.

அந்தவகையில், மைதானங்களில் அடிக்கடி துப்பக்கூடாது. வீரர்கள் சந்தோசத்தில் ஒருவருக்கொருவர் அணைத்துக்கொள்ளக் கூடாது, முடிந்த அளவு சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று வீரர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஒரு வீரர் மற்றொரு வீரர் முகம் அருகே அல்லது நடுவர் முகம் அருகே சென்று வேண்டுமென்றே இருமினால் அவரை சிவப்பு அட்டை காட்டி வெளியே அனுப்பலாம். அல்லது மஞ்சள் அட்டை கொடுத்து தண்டிக்கலாம் என்று நடுவருக்கு அதிகாரம் கொடுக்கும் வகையில் இங்கிலாந்து கால்பந்து சங்கம் வழிகாட்டு நெறிமுறையை திருத்தம் செய்துள்ளது. (ரி2)

# தன்னம்பிக்கை அவசியம்



ஏதாவது ஓர் அதிசயம் நிகழ்ந்து உன் துன்பமான வாழ்க்கையே தலைகீழாக மாறிவிடும் எனக் காத்திருக்கிறாயா... எந்த அதிசயமும் இதுவரை நிகழவில்லையா? எனில், நீயே அந்த அதிசயமாக மாறிவிடு!'

இன்று உலகின் மிக முக்கியமான தன்னம்பிக்கைப் பேச்சாளராகக் கருதப்படும் நிக் வ்யூஜெஸிக், அடிக்கடி உச்சரிக்கும் உத்வேக வரிகள் இவை. இந்த வார்த்தைகளை நிக், வெறுமனே உதடுகளால் உச்சரிக்கவில்லை. தன் வலி மிகுந்த பிறவியில், வெளி மண்டலத்தில் எப்படியேனும் வாழ்ந்தே தீரவேண்டும் என்ற வைராக்கியத்தில் வழி தேடி, போராடி, உச்சம் தொட்ட பின், உணர்ந்து உச்சரித்தவை.

1982ம் ஆண்டு டிசம்பர் 4ம் தேதி... ஆஸ்திரேலியாவின் மெல்போர்னில் ஒரு மருத்துவமனையில் நிக் பிறந்திருந்தான். பிரசவ மயக்கம் தெளிந்த அவனது தாய் துஸிகா, குழந்தையைத் தேடினாள்.

"உங்களுக்கு ஒரு பையன் பிறந்திருக்கிறான்" என நிக்கை (Nick Vujicic) அவனுடைய தந்தையிடம் காட்டியபோது உள்ளுக்குள் குமட்டிக் கொண்டு வர, ஆஸ்பத்திரியை விட்டு வெளியே ஓடி வந்து வாந்தியெடுத்தார் தந்தை ! "இந்தாங்க உங்க பையன்" என தாயிடம் நீட்டியபோது "ஐயோ.. என் முன்னாலிருந்து கொண்டு போங்கள்..." என நான்கு மாதங்கள் அவனைத் தொடாமலேயே அழுது தீர்த்தாள் தாய்.

நாளும் கிழமையும் எண்ணி எண்ணி ஆவலுடன் குழந்தையைக் கொஞ்ச காத்திருந்த அந்த பெற்றோருக்குப் பிறந்ததோ கைகளும் கால்களும் இல்லாத ஒரு குழந்தை ! இரண்டு கைகளும், இரண்டு கால்களும் இல்லாத ஒருவனால் என்ன செய்ய முடியும் பிச்சை எடுப்பதைத் தவிர என்று தானே நினைக்கத் தோன்றுகிறது அந்தக் கவலைதான் அந்த ஆஸ்திரேலியப் பெற்றோருக்கும் இருந்தது. ஒரு சின்ன குறை இருந்தாலே சமூகத்தில் தாக்குப் பிடிப்பது மிகவும் கடினம். கைகளும் இல்லாமல், கால்களும் இல்லாமல் இவனெல்லாம் என்ன வாழ்க்கை வாழப்போகிறான் ? தொட்டதுக்கெல்லாம் யாரோ ஒருவருடைய உதவியில் தானே இவன் வாழ முடியும் என்பதே பெற்றோரின் தலையாய கவலையாய் ஆகிப் போனது. அன்றைக்கு அவர்களிடம் போய், "கவலைப்படாதீர்கள். உங்கள் மகன் ஒரு நாள் ஓடுவான், குதிப்பான், நீச்சலடிப்பான், கால்ஃப் விளையாடுவான், உதைபந்து விளையாடுவான், கடலில் ஷர்ப் செய்வான் என்றெல்லாம் சொல்லியிருந்தால்" அன்றைக்கே ஒரு கொலை விழுந்தாலும் விழுந்திருக்கும். ஆனால் எல்லாமே ஒரு பரபரப்பான சினிமா போல நிஜமாகியிருக்கிறது இன்று.

இப்போது மிகவும் உற்சாகமாய் இருக்கும் நிக் கடந்து வந்த ஆரம்ப வாழ்க்கை மிகக் கொடுமையானது. கைகளும் கால்களும் இல்லையென்றாலும் பெற்றோர் அவனை பள்ளிக்கூடத்தில் சேர்த்து விட்டார்கள். பள்ளிக்கூடத்துக்குச் சென்றால் பிள்ளைகள் நிக்கை நெருங்கி வரவே பயப்பட்டார்கள். ஏதோ ஏலியனைப் பார்ப்பது போலத் தான் நிக்கை பார்த்தார்கள்.

அப்போதெல்லாம் தொட்டதுக்கெல்லாம் தற்கொலைச் சிந்தனைகள் வந்து கொண்டே இருந்தன. எப்படியாவது செத்துப் போகவேண்டும் என்று நினைத்தாலும் அதையும் தனியே செய்ய முடியாத நிலை. "கொஞ்சம் என்னைக் கொல்வீர்களா பிளீஸ்" என யாரிடமாவது கெஞ்ச வேண்டிய நிலையே நிக்கிற்கு. ஆரம்ப காலத்தில் நிக்கின் உருவத்தைப் பார்த்து அதிர்ச்சியில் உறைந்த பெற்றோர் பின்னர் நிக்கிற்கு தன்னம்பிக்கையை ஊட்டத் துவங்கினர். 18 மாதமாக இருந்தபோதே நீச்சல் பழக்கத் துவக்கிய தந்தை, ஆறு வயதாக இருக்கும் போது கம்ப்யூட்டர் கற்றுக் கொடுத்தார். தாய் பிளாஸ்டிக்கில் ஒரு வளையத்தைச் செய்து அதில் பென்சிலை மாட்டி எழுத கற்றுக் கொடுத்தார். இவையெல்லாம் தான் நிக்கிற்கு நிமிர்ந்து நிற்கும் தைரியத்தைக் கொடுத்தது.

நிக்கின் இடது கால் இருக்க வேண்டிய இடத்தில் ஆறாவது விரல் போல நீட்டிக் கொண்டிருக்கும் ஒரு பாகம் தான் அவனுடைய வரப்பிரசாதம். அதுதான் அவனுடைய கை, கால், துடுப்பு, எல்லாமே !. நடப்பது, எழுதுவது, நீந்துவது, விளையாடுவது என சர்வமும் அதன் வழியாகவே. இது மட்டும் இல்லாமலிருந்தால் நான் என்ன செய்திருப்பேனோ தெரியாது என சொல்லி சிரிக்கிறார் நிக். தனது பதின்மூன்றாவது வயதில் ஊனமுற்ற ஒருவரைப் பற்றிய வரலாறு ஒன்றை நிக் படித்தார். அதுதான் அவருடைய வாழ்க்கையையே புரட்டிப் போட்டது. அந்த ஊனமுற்ற மனிதர் கழுத்தையும், நாடியையும் பயன்படுத்தி கால்ப் விளையாடியதைப் படித்தபோது நிக்கிற்குள் ஒரு மின்னல் அடித்தது.

"அடடா... தேவையில்லாமல் தற்கொலை செய்யப் பார்த்தேனே" என தன்னையே நொந்து கொண்டவர், "நல்ல வேளை இதுவரை சாகவில்லை" என நினைத்துக் கொண்டு வாழ்க்கையை புதிய உத்வேகத்துடன் எதிர்கொள்ள ஆரம்பித்திருக்கிறார். அதுவரை கண்ணாடியைப் பார்க்கும் போது கைகளும், கால்களும் இல்லாத சதுர உடம்பு மட்டுமே தெரிந்த நிக்கிற்கு அதன் பின் தான் தனது அழகிய கண்கள் தெரிந்தன என சிலிர்ப்பூட்டும் நம்பிக்கை விதைக்கிறார்.



அதன் பிறகு கடவுளைப் பழிப்பது, சாக நினைப்பது, முனகுவது, அழுவது, கவலை கொள்வது என அனைத்து வேண்டாத விஷயங்களையும் மூடை கட்டி தூர எறிந்து விட்டு உற்சாகமாகிவிட்டார் நிக். பிறருக்கு தன்னம்பிக்கை ஊட்டும் பேச்சுகளையும் நடத்தத் தொடங்கிவிட்டார். அப்படி ஆரம்பித்த அவரது தெம்பூட்டும் பணி, 24 நாடுகளுக்குப் பயணம் செய்து இலட்சக்கணக்கான மக்கள் கூட்டத்தில் உரையாற்றும் அளவுக்கு பரந்து விரிந்திருப்பது வியக்க வைக்கிறது ! தற்போது ஊனமுற்றவர்களுக்காக இயங்கும் "லைஃப் வித்தவுட் லிம்ப்ஸ்" எனும் நிறுவனத்தின் இயக்குநராகவும் இருக்கிறார் அவர்.

2010ம் ஆண்டு டெக்ஸாஸின் ஓர் இடத்தில் உரையாற்றியபோது அவளைப் பார்த்தார் நிக். கண்டதும் காதல். அந்தப் பொழுதில் தன் காதலைச் சொல்லி, வாயால் மோதிரமும் அணிவித்தார் நிக். கேனே மகிழ்ச்சியில் திளைத்தார். ஆனால் நிக்கைச் சந்தித்த முதல் நொடியிலேயே இவரை கணவர் ஆக்கிக்கொள்ள வேண்டும் எனத் தோன்றியது' என்பது கேனேவின் லவ் மொழி. இருவரும் 2012ம் ஆண்டு திருமணம் செய்துகொண்டார்கள். 2013ம் ஆண்டு பரிபூரண ஆரோக்கியத்துடன் ஓர் ஆண் குழந்தையும் பெற்றுக்கொண்டார்கள். இப்போது வேறு குழந்தைகளுக்கு இவர்களுக்கு இருக்கின்றன.

இளம் வயதினரின் தாழ்வு மனப்பான்மை, தன்னம்பிக்கைக் குறைவு, மன அழுத்தம் இவையெல்லாம் இவரைப் பார்த்ததும் பனிக்கட்டியில் வரைந்த ஓவியமாய் ஈரமாய் ஒழுகி மறைந்துவிடுகிறதாம். "கைகள் இல்லை, கால்கள் இல்லை, கவலைகளும் இல்லை" எனச் சிரிக்கும் நிக் உண்மையிலேயே இந்தப் பூமியில் வாழ்வதற்கு வழி தெரியாமல் நிற்போருக்கு சிறந்த முன்னுதாரணம்.

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 04.08.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.